சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

வழக்கு எண். எம்.சி.ஓ.பி. 21/2016

**PW 1 பொன்மணிதங்கம்** **06.10.2023**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

என் மைனர் குழந்தைக்காக மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். விபத்து சமயம் வாகனத்தை என் கணவரான 1ம் எதிர்மனுதாரர் ஓட்டிவந்தார் என்றால் சரிதான். 10.08.2015ம் தேதி நெகமத்திலிருந்து பொள்ளாச்சி வரும் சமயத்தில் விபத்து நடந்தது என்றால் சரிதான். விபத்தில் எனக்கு காயம் ஏற்படவில்லை என்றால் அளவான சாறுகாயம் ஏற்பட்டது. எதிரே வந்த வாகனத்தின் பதிவு எண் TN 41 AK 7215 ஆகும். என் கணவர் ஓட்டி வந்த வாகனத்தின் பதிவெண் TN 41 AF 3731 ஆகும். வாகனத்தை ஓட்ட என் கணவருக்கு ஓட்டுநர் உரிமம் இருந்தது. என் கணவரின் ஓட்டுநர் உரிமத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் கணவருக்கு ஓட்டுர் உரிமம் இல்லை என்றாலும் அதனால்தான் உரிமத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் கணவர் ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனத்தை தாறுமாறாக ஓட்டிவந்து விபத்து ஏற்படக்காரணமாக இருந்துள்ளார் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் ரூ.150000/- நஷ்டஈடு கேட்டுள்ளேன். என் குழந்தைக்கு ஏற்பட்டுள்ள காரணம் சாதாரண காயம் என்றாலும் நான் அதிக நஷ்டஈடு கேட்டுள்ளேன் என்றால் சரியல்ல. மனுவில் நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் 2ம் எதிர்மனுதாரர் நான் கோரியுள்ள நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

**4 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து சமயத்தில் என் குழந்தை என் கணவர் ஓட்டிச்சென்ற வாகனத்தில் பின்னால் அமர்ந்து சென்றது என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர்தான் என் கணவர் என்றால் சரிதான். என் கணவர் எதிரே வந்த வாகனத்தில் மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. காவல் துறையில் முதல் தகவல் அறிக்கை, குற்ற இறுதி அறிக்கை என் கணவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். எதிரே வந்த வாகனத்தில் வந்த நபர் விபத்தில் இறந்துவிட்டார் என்றால் சரிதான். இறந்துபோனவரின் வாரிசுகள் ஏற்கனவே இந்நீதிமன்றத்தில் மனு எண் 99/2015 வழக்கு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கில் என் கணவரும் 2 ம் எதிர்மனுதாரரான காப்பீட்டு நிறுவனமும்தான் நஷ்டஈடு செலுத்த வேண்டும் என உத்தரவு செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கில் 4 ம் எதிர்மனுதாரர் எதிரே வந்த வாகனத்தின் காப்பீட்டு நிறுவனதாரர் என்றால் சரிதான். அந்த வழக்கு 4 ம் எதிர்மனுதாரருக்கு எதிராக தள்ளுபடி செய்யப்பட்ட விபரம் எனக்கு தெரியாது. இவ்வழக்கில் என் கணவர் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்றால் சரிதான். மனு எண் 99/2015 வழக்கிலும் என் கணவர் தோன்றாத்தரப்பினர் என்றால் சரிதான். விபத்துக்கு முழுக்காரணம் என் கணவர் என்பதால்தான் அவர் வழக்கு நடத்தவில்லை என்றாலும் 1 மற்றும் 2 ம் எதிர்மனுதாரர்கள்தான் இழப்பீடு வழங்க வேண்டும் என்றாலும் 3, 4 ம் எதிர்மனுதாரர்கள் நஷ்டஈடு செலுத்த கடமைப்பட்டவர்கள் அல்ல என்றால் சரியல்ல. நான் கேட்டிருக்கும் இழப்பீடு அதிகம் என்றாலும் அந்த இழப்பீடு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. விபத்து என் கணவரின் அஜாக்கிரதையாலும் கவனக்குறைவாலும் ஏற்பட்ட காரணத்தால் 3, 4 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. என் கணவர் தன்னுடைய அஜாக்கிரதையால் விபத்து

நடைபெறவில்லை என தனிநபர் புகார் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

**3ம் எதிர்மனுதாரர் 4ம் எதிர்மனுதாரரின் குறுக்கு விசாரணையை தமதாக ஏற்றுக்கொள்கிறார்.**

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி